## திருச்சியில் கழகத் தலைவரின் கர்ஜனையும்

# காலம் சொல்லும் ஏற்புரையும்!



ஒரு தலைவர் தன் தொண்டர்களிடையே பேசுவதென்பது சாதாரண நிகழ்வாயினும், அந்த பேச்சில் எதை முன் நிறுத்தி அதை எழுச்சி உரையாக மாற்றுகிறார் என்பதுமே அதன் சிறப்பு. அந்த வகையில் கடந்த 09.03.2026 திருச்சி சிறுகனூரில் நடைபெற்ற தி.மு.க நிர்வாகிகள் சந்திப்பு மாநில மாநாட்டில், ஒப்பாரும் மிக்காரும் இல்லா நமது ஒப்பற்ற கழகத் தலைவர் அவர்களின் அந்த உரையை சாதாரணமாக எவரும் கடந்து சென்று விட முடியாது.

**காலத்திற்கேற்ற அறைகூவலாக தன்னைச்சுற்றியும், மாநாட்டுத் திடல் தாண்டியும் சுமார் 15 லட்சம் தொண்டர்களும் பொதுமக்களும் இருப்பதை உணர்ந்து சொற்களில் தெளிவும் உச்சரிப்பில் கம்பீரமும் கலந்து என்ன செய்தி சொல்ல வருகிறோம் என்பதை மிகத் திடமாக பதிவு செய்து கூடியிருந்தோர்களையும், கூடாத தொலைவில் இருந்து தொலைக்காட்சியில் பார்ப்பவர்களும் கேட்டு பாராட்டக்கூடிய வகையில் அந்த பேச்சு இல்லை ! இல்லை ! உரைவீச்சு அமைந்தது என்பது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க பதிவு என்பதில் மாற்றுக்கருத்தே இல்லை என்று சொல்லலாம்.**

உலகின் தலைச்சிறந்த அரசியல் தலைவர்கள் தங்களின் தொலைநோக்கு பார்வை, மக்கள் மீதான அன்பு மற்றும் தார்மீக விழுமியங்களை வலியுறுத்தி சொற்பொழிவுகள் மூலம் வரலாற்றை மாற்றியுள்ளனர். மகாத்மா காந்தி, நெல்சன் மண்டேலா, நேரு போன்றோர் அறவழி, சமத்துவம் மற்றும் ஜனநாயகத்தை வலியுறுத்தினர். இந்த உரைத் தொகுப்புகள் தலைமைத்துவம் மற்றும் சமூக நீதிக்கான தூண்டுதலாக இன்றளவும் உள்ளதை யாரும் புறந்தள்ளி விட முடியாது.

மகாத்மா காந்தி அகிம்சை மற்றும் சத்தியாகிரகம் மூலம் அமைதி, உண்மை மற்றும் அறவழியில் சுதந்திரம் பெறுவதை வலியுறுத்தி பல பொதுக்கூட்டங்களில் பேசினார் , வெற்றியும் கண்டார். நெல்சன் மண்டேலா நிறவெறிக்கு எதிரான போராட்டம் மற்றும் பழிவாங்காத அனைவரையும் உள்ளடக்கிய தென் ஆப்பிரிக்காவை உருவாக்க வேண்டும் என்று முழக்கமிட்டு, 27 ஆண்டுகளுக்கும் மேலாக சிறை தண்டனையும், அனுபவித்து, அதற்கான விடியலை பெற அவர் தியாகம் செய்தார் என்பது வரலாறு.

ஜவஹர்லால் நேரு சுதந்திர இந்தியாவில் நவீனமயமாக்குதல், அறிவியல் மனப்பான்மை மற்றும் ஜனநாயகத்தை நிலை நிறுத்துவது போன்றவற்றிற்காக உரை நிகழ்த்தி நவீன இந்தியாவின் சிற்பி என்று பெயர் பெற்றார். மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் இனவெறி ஒழிப்பு, சம உரிமை மற்றும் சகோதரத்துவத்திற்காக பேசினார். ஆபிரகாம் லிங்கன் செட்டிஸ்பார்க் உரையில் மக்களால், மக்களுக்காக, மக்களின் அரசாங்கம் என்ற ஜனநாயக கொள்கையை உலகிற்கு உணர்த்தும் வகையில் தன்னுடைய முழக்கத்தை வைத்தார்.

ஒரு தலைவரின் சொற்பொழிவின் சிறப்பு அம்சங்களாக இங்கு பார்க்கப்படுவது யாதெனில், எதிர்கால சந்ததியினரின் வாழ்வைக் கருத்தில் கொண்டு தொலைநோக்கு சிந்தனையோடு இருத்தலும், சாதாரண மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் எளிய மொழியில் அவை இருத்தலும், நெருக்கடியான காலங்களில் உறுதியான கொள்கை முழக்கமாக அவை பதியப்பட வேண்டுதலுமே சிறப்பு என்பதாகும்.

இப்படி பேசிய தலைவர்கள் தங்களின் பேச்சுக்கள் மூலம் வெறும் வார்த்தைகளை மட்டுமே பகிராமல் செயல்வடிவிலான மாற்றத்தையும் கொண்டு வந்தனர். சவாலை ஏற்றுக்கொண்டு, அதை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்ற தலைவர்களான ஜார்ஜ் வாஷிங்டன், பிராங்க்ளின் ரூஸ்வெல்ட், வின்ஸ்டன் சர்ச்சில், டுவைட் ஐஸ் நோவர் போன்றோர் தங்களது பிரகடனங்களின் மூலம். நாட்டின் இக்கட்டான நிலையில் அதுவும் போர்க்களத்தில் நின்று தங்களது எழுச்சியூட்டும் உரைகளால் இரண்டாம் உலக போரின் போது போரின் அலையை தங்களின் உரைகளால் திருப்பிய பெருமை பெற்றவருமான ரூஸ்வெல்டும், வின்சென்ட் சர்ச்சிலும் ஆவார்..

வரலாற்றில் பல தலைவர்கள் தன்னகத்தே சில சிறப்பு வாய்ந்த குணங்கள் செயல்கள் மற்றும் திறனால் அழியாப் புகழை இன்று வரை பெற்றுள்ளது நாம் அறிவோம்.

ஜூலியஸ் சீசர், அகஸ்டல் சீசர், மகா அலெக்சாண்டர், சார்லி மேன், ஜோனாப் ஆர்க் போன்றோர்கள் இப்படிப்பட்ட குணங்களாலும் செயல்களாலும்தான் வரலாற்றில் இன்றளவும் நிலைபெற்றுள்ளனர்.

தலைமைத்துவ பணி என்பது மற்றவர்களை ஊக்குவிப்பதில் பல காரணிகள் ஈடுபடுவதால் தலைமைத்துவ திறன்கள் பரந்த அளவிலானவற்றை உள்ளடக்கியதாகும்.

உதாரணமாக வணிகத் தலைவர்கள் மற்றும் ராணுவ தளபதிகள் தாங்கள் எடுத்த முடிவில் வெற்றி பெற முலோபாய சிந்தனைகளையே நம்பி இருந்தனர். ஆனால் நிர்வாகக் குழுவிற்கும் போர் அறைக்கும் இடையே தலைமைத்துவ பணிகள் சற்றே மாறுபடும். ஏனெனில் முடிவெடுக்கும் முடிவுகள் கடுமையாக வேறுபடுவதால் ஒரு பிரதமர் அல்லது ஜனாதிபதி அல்லது ஒரு மாநிலத்தின் முதல்வரானவர்கள் நிதி ஆலோசகரை விட அதிக ஆபத்து நிறைந்த சூழலில்தான் இருப்பார்கள். மன அழுத்தம் ஒப்பீட்டளவில் இருந்தாலும் குழப்பத்தை ஒழுங்கமைக்கவும், மாற்றத்தை உருவாக்கவும் சிறந்த தலைவர்கள் பயன்படுத்தும் கருவிகள் சூழலைப் பொருட்படுத்தாமல் ஒத்தவை.

எந்த ஒரு அரங்கிலும் தலைமைத்துவத்திற்கான சிறந்த உத்தி என்னவென்றால் குழு உறுப்பினர்களை எது ஊக்குவிக்கிறது என்பதை கற்றுக் கொள்வதும், மக்களை வெற்றிபெறவும், பணிக்கு அதிக தேவைகளை சேர்த்திடவும், விளையாட்டுத் திட்டங்களை உருவாக்குவதும் ஆகும். வலிமையான தலைவர்கள் அனைவரும் பொதுவான தலைமைத்துவ பாணியியைக் கடைபிடிப்பதில்லை. மாறாக வரலாற்றில் சிறந்த தலைவர்கள் நினைவுகூரப்பெற்றார்கள் என்றால் காரணம் அவர்கள் வாழ்ந்த காலத்தில் அவர்கள் சாதாரணமாக இருந்தனர். சூழ்நிலைகள் பலவாறு இருந்தபொழுதும் செல்வாக்கு மிக்கவராக மாற தங்கள் பலங்களை பலவிதத்திலும் பயன்படுத்தினர்.

ஒரு தொலைநோக்குப் பார்வையோடு அதை அடைவதற்கான வழிமுறைகள் குறித்து ஆய்வு செய்தனர். தொண்டர்கள் அனைவரையும் உற்சாகப்படுத்தக்கூடிய தலைவராக தான் பரிணமிக்க தங்களின் பேச்சும் செயலும் இருப்பது பொதுவான உள்ளுணர்வு.

அதற்கு தேவை கவர்ச்சியான தலைவராகவும் இருத்தல் வேண்டும். கவர்ச்சி என்பது எப்போதும் நேர்மறையான நிகழ்வல்ல. சில நேரம் அந்த கவர்ச்சியே பல எதிர்மறை செயல்களையும், நிகழ்வுகளையும் உருவாக்கி பலரின் மரணத்திற்கு கூட காரணமாகிவிடும். அது ஒரு பிறழ்நிலை மனோபாவம் கொண்டவர்களால் ஏற்படுத்தப்படும் கொலைச்செயல் என்பதை சமீபத்திய நிகழ்வுகள் நம் நாட்டில் நடப்பதை நாம் அறிவோம்.

இத்தகைய சூழ்நிலையில் நம் நாட்டில் அதுவும் நம் தமிழ்நாட்டில் எத்தனையோ தலைவர்கள் பேசியிருக்கிறார்கள் திரு.வி.கல்யாண சுந்தரனார், பட்டுக்கோட்டை, அழகிரி, பசும்பொன் முத்துராமலிங்க தேவர், மூதறிஞர் ராஜாஜி இவர்களைக் கடந்து தந்தை பெரியார் பகுத்தறிவு, சுயமரியாதை, சமூக நீதி, சாதிய எதிர்ப்பு, பெண் விடுதலை, மூடநம்பிக்கை ஒழிப்பு ஆகியவைகளை உள்ளடக்கி எளிமையான தமிழில் பழமொழிகள், குட்டிக்கதைகள் மற்றும் நேரடி உரையாடல் மூலம் மக்களை ஈர்த்தார்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் பேச்சு, அடுக்குமொழி, கரகரத்த குரல், எளிமையான பேச்சு வழக்கு மூலம் திராவிட இயக்க கொள்கைகளை அண்ணன் தம்பி பாச உணர்வோடும் பகிர அது தி.மு.க எனும் மாபெரும் இயக்கம் உருவாகிட தமிழ்நாடு தன்னெழுச்சி பெற காரணமாயிருந்தது.

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞரின் பேச்சு தனது கூர்மையான வசன நடை அடுக்குமொழி தமிழ், நகைச்சுவை மற்றும் உணர்ச்சிகரமான தர்க்கங்களுக்காவும் பெயர்பெற்றதோடு அவரின் மொழிப்பற்று, சமூக நீதி ஆகியவற்றை வலியுறுத்தி ஈர்க்கும் விதமாக அமைந்தது "உடன்பிறப்பே" என்ற ஒற்றைச் சொல்லால் கோடிக்கணக்கானோரைக் கட்டிப்போடும் மந்திர சொல்லாக விளங்கியதை இந்த உலகமே அறியும்.

தலைவர் கலைஞர் அவர்களின் சட்டமன்ற பேச்சானாலும், பொது மேடையானாலும் அவர் தொண்டர்களை ஈர்த்த விதமானது அரசியலில் உளவியல் ரீதியான ஈர்ப்பு சக்தி என்பதை பல அறிவாளிகள் ஒப்புகொள்கின்றனர். மொழி உணர்வையும், இன உணர்வையும் எழுச்சியூட்ட கூடிய வகையில் அவர் பேசியது இன்றளவு வரை திராவிட இயக்கத்தின் விழுமியங்களாக சூரிய கதிரென பிரகாசிப்பதை நாம் அறிவோம்.



**எம்.எஸ்.கார்த்திக்**
மாவட்ட கழக துணைச் செயலாளர்,
திருவாரூர் மாவட்ட தி.மு.க.

உலகத் தலைவர்களின் சிறப்புகளைக் கண்டோம், நம் உன்னத தலைவர்களின் பெருமைகளை பார்த்தோம்.....

இவை எல்லாவற்றையும் கடந்து ஒரு தலைவனாக அதுவும் தலைமை தொண்டனாக லட்சோபலட்ச தொண்டர்களிடையே எவ்வித உணர்ச்சிவசப்படுதலுக்கும் ஆளாகாமல், தன்னிலை உணர்ந்த தன்னிகரல்லாத தலைவனாக நன்றி பெருக்கை வெளிப்படுத்தும் விதமாக உங்களில் ஒருவனாக உங்களுக்காக, உங்களால் நான் இன்று இந்நிலைக்கு உயர்ந்திருக்கின்றேன் என்ற சொற்றொடர்களும்,

கொள்கை உறுதியோடு எதிரிகளை ஏளனமின்றி ஏதேச்சதிகார பேச்சுமின்றி போருக்கு அழைக்கும் ஒரு பேரரசனை போல் போர் முழக்கம் இட்டதும்......

ஒரு சொல் கூட பிழையின்றி பின்னர்த்தமின்றி எவரையும் இகழாது தனக்கான கடமையை இடும் கட்டளையை தொண்டர்களின் மனம் எழுச்சி பெறும் வகையில் பேசிய அந்த சிறுகனூர் மாநாட்டுப் பேச்சென்பது இனிவரும் காலங்களில் கோடிக்கணக்கான தொண்டர்களுக்கு ஒரு தலைவராக இருப்பவர்.....எப்படி பேசவேண்டும் என்பதற்கான வரலாற்றுச் சான்று என்பதை காலம் சொல்லும்.

கழகத் தலைவர் அவர்களே அப்பேற்பட்ட வரலாற்று பெருமை சொல்லும் அளவிற்கு உழைப்பால் மட்டுமே உயர்ந்து நிற்கும் தங்கள் தலைமையின் கீழ் நாங்கள் பொறுப்பில் இருப்பது நாங்கள் பெற்ற வரம் என்றே, கூறவேண்டும்.


இயக்கத்தின் தலைவராக இருப்பதால் தலைவர் என்பதைக் காட்டிலும் 70, 80களில் பிறந்த என்னைப் போன்ற தங்களின் தம்பிமார்களுக்கு அண்ணன் தளபதி அவர்களே எனும்போது வருகின்ற வைப்பிரேசனுக்கு ஈடு இணை ஏதும் இல்லை என்ற செய்தியோடு, தலைமைத்துவம் என்பது சாதாரண நபர்களிடமிருந்து அசாதராணமான சாதனைகளை பெறும் திறனாகும் சொன்னவர் பிரையன் ட்ரேசி.

அப்படித்தான் தங்களின் முழக்கமான வெல்வோம் இருநூறு ! படைப்போம் வரலாறு ! தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என்ற முழக்கத்தோடு இதுதான் காலம் சொல்லும் ஏற்புரை என வணங்குகிறேன்.

---

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில் தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை, அடுப்பு எரிக்க சிலிண்டரும் இல்லை,

# தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசையும், அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து, மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!



## கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

**நாள் : 15.03.2026 நேரம் : காலை 10.30 மணி**

| வ.எண் | கழக அமைப்பு | இடம் |
|---|---|---|
| 1. | கரூர் வடக்கு பகுதி | அண்ணா சிலை முன்பு , வெங்கமேடு, கரூர் |
| 2. | கரூர் மத்திய மேற்கு பகுதி | வேலுச்சாமிபுரம், கரூர் |
| 3. | கரூர் மத்திய பகுதி | தபால் நிலையம் முன்பு, கரூர் |
| 4. | கரூர் மத்திய கிழக்கு பகுதி | பசுபதிபாளையம், கரூர் |
| 5. | கரூர் தெற்கு பகுதி | காந்திகிராமம், கரூர் |
| 6. | கரூர் மேற்கு பகுதி | தாந்தோனிமலை, கரூர் |
| 7. | அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றியம் | ஈசநத்தம் கடைவீதி |
| 8. | அரவக்குறிச்சி மேற்கு ஒன்றியம் | அண்ணா நகர், வேலம்பாடி ஊராட்சி |
| 9. | க.பரமத்தி தெற்கு ஒன்றியம் | சின்னதாராபுரம் கடைவீதி |
| 10. | க.பரமத்தி மேற்கு ஒன்றியம் | தென்னிலை கடைவீதி |
| 11. | க.பரமத்தி வடக்கு ஒன்றியம் | க.பரமத்தி கடைவீதி |
| 12. | கரூர் மேற்கு ஒன்றியம் | ஆலமரத்துமேடு |
| 13. | கரூர் வடக்கு ஒன்றியம் | மண்மங்கலம் பேருந்து நிறுத்தம், |
| 14. | கரூர் கிழக்கு ஒன்றியம் | அரசு குடியிருப்பு பேருந்து நிறுத்தம் (வாங்கல் சாலை ) |
| 15. | தாந்தோணி மேற்கு ஒன்றியம் | ஆத்தூர் பிரிவு, கரூர் |
| 16. | தாந்தோணி கிழக்கு ஒன்றியம் | வெள்ளியனை கடைவீதி |
| 17. | கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றியம் | மாயனூர் பேருந்து நிறுத்தம் |
| 18. | கடவூர் வடக்கு ஒன்றியம் | பி.உடையாபட்டிபேருந்து நிறுத்தம், பண்ணபட்டி ஊராட்சி |
| 19. | கடவூர் தெற்கு ஒன்றியம் | சேர்வைக்காரன்பட்டி கடைவீதி |
| 20. | கடவூர் மேற்கு ஒன்றியம் | தரகம்பட்டி கடைவீதி |
| 21. | கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றியம் | லாலாப்பேட்டை கடைவீதி |
| 22. | கிருஷ்ணராயபுரம் தெற்கு ஒன்றியம் | பஞ்சப்பட்டி கடைவீதி |
| 23. | குளித்தலை மேற்கு ஒன்றியம் | பொய்யாமணி |
| 24. | குளித்தலை கிழக்கு ஒன்றியம் | அய்யர்மலை கடைவீதி |
| 25. | தோகைமலை மேற்கு ஒன்றியம் | தோகைமலை பேருந்து நிலையம் அருகில் |
| 26. | தோகைமலை கிழக்கு ஒன்றியம் | ஆர்டி.மலை கடைவீதி |
| 27. | பள்ளப்பட்டி நகராட்சி | ஷா நகர், பள்ளப்பட்டி |
| 28. | புகழூர் நகராட்சி | வேலாயுதம்பாளையம் ரவுண்டானா அருகில், |
| 29. | குளித்தலை நகராட்சி | குளித்தலை தபால் நிலையம் அருகில், |
| 30. | அரவக்குறிச்சி பேரூராட்சி | புங்கம்பாடி கார்னர், அரவக்குறிச்சி |
| 31. | புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி | தளவாபாளையம் பேருந்து நிறுத்தம் |
| 32. | புலியூர் பேரூராட்சி | புலியூர் கடைவீதி |
| 33. | உப்பிடமங்கலம் பேரூராட்சி | உப்பிடமங்கலம் தெற்கு கேட் அருகில் |
| 34. | கிருஷ்ணராயபுரம் பேரூராட்சி | கிருஷ்ணராயபுரம் பேருந்து நிறுத்தம், |
| 35. | பழைய ஜெயங்கொண்டம் பேரூராட்சி | பழைய ஜெயங்கொண்டம் கடைவீதி, |
| 36. | மருதூர் பேரூராட்சி | குப்புரெட்டிப்பட்டி பேருந்து நிறுத்தம் |
| 37. | நங்கவரம் பேரூராட்சி | நங்கவரம் பேருந்து நிறுத்தம் |

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் - மாநில நிர்வாகிகள், மாவட்ட, மாநகர நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், மற்றும் மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சியைச் சார்ந்த நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ.**
செயலாளர்
கரூர் மாவட்ட தி.மு.க.

---

## நெல்லை மேற்கு மாவட்டம் அம்பாசமுத்திரம் தொகுதி

# வீரவநல்லூருக்கு முன்னாள் முதல்வர் ஓ.பி.எஸ். வருகை!கழகத்தினர் திரளாக பங்கேற்பீர்!

## நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் வேண்டுகோள்!

*நெல்லை, மார்ச் 15-*

நெல்லை மேற்கு மாவட்டம் அம்பாசமுத்திரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வீரவநல்லூர் எஸ்.எல்.எம்.மஹால் (17.03.2026) அன்று மாலை 5 மணி அளவில்

நடைபெற உள்ள தேர்தல் சுற்றுப்பயணம் நிகழ்வில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார். கழகத்தினர் திரளாக பங்கேற்க வேண்டும்.என நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் வழி காட்டுதலின்படி முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் வருகின்ற 17.03.2026 மாலை 5.00 மணிக்கு அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி வீரவநல்லூர், எஸ்.எல்.எம் மஹாலில் நடைபெற உள்ள தேர்தல் சுற்றுப்பயணம் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள உள்ளார்கள்.

இந்நிகழ்வில் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தொகுதி பார்வையாளர்,மாவட்டக் கழக நிர்வாகிகள்,மாநில அணி நிர்வாகிகள்,தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய,நகர,பேரூர் கழக செயலாளர்கள்,சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள்,கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

## தி.மு.க. மகளிர் அணி

### மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

**தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு!**

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு மகளிர் அணியின் திருநெல்வேலி கிழக்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்

தலைவர் - என்.எஸ். கமலாநேரு 316, உடன்குடி ரோடு, திசையன்விளை - 627657, திருநெல்வேலி.

துணைத் தலைவர் - பா. பாக்கியதாய் 97இ, மெயின் ரோடு, செம்பாடு, வள்ளியம்மாள்புரம், - 627117, திருநெல்வேலி.

அமைப்பாளர் - அ. மல்லிகா ஆர்.சி. காம்பவுண்டு, ஆவரைகுளம், இராதாபுரம் தாலுகா - 627133, திருநெல்வேலி.

துணை அமைப்பாளர்கள் - 1) க. பரிமளம் 8/118, நேதாஜி நகர், இராதாபுரம் அஞ்சல் - 627111, திருநெல்வேலி. 2) லி. ஆறுமுகதேவி 372, முத்து பேச்சியம்மன் கோவில் தெரு, சுடலை ஆண்டவர்கோவில் அருகில், திசையன்விளை - 627657, திருநெல்வேலி. 3) ஐ. முத்துலெட்சுமி 10/3, தெற்கு தெரு, கும்பிகுளம், இராதாபுரம் தாலுக்கா - 627112, திருநெல்வேலி. 4) பேபி கண்ணன் 4/56, வடக்குத் தெரு, கிருஷ்ணாபுரம், பாளையங்கோட்டை - 627011, திருநெல்வேலி. 5) அ. ஆஷாராஜலட்சுமி 6, பாதைத் தெரு, நெருஞ்சி தெரு, பணகுடி - 627109. திருநெல்வேலி.

வலைதள பொறுப்பாளர்கள் - 1) மு. சங்கரி 37/1, கோட்டை யாதவர் தெரு, கீழத் தெரு, களக்காடு - 627501, திருநெல்வேலி. 2) சிலுவை புஷ்பம் சோமநாதபேரி, முனைஞ்சிப்பட்டி ஊராட்சி - 627355, திருநெல்வேலி.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 12-03-2026.

**ஜெ. ஹெலன்டேவிட்சன்,**
செயலாளர்
தி.மு.க. மகளிர் அணி

---

## தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

### மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

**தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு!**

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. மகளிர் தொண்டர் அணியின் திருநெல்வேலி கிழக்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்

தலைவர் - ச. பொன்இசக்கியம்மாள் 67, யாதவர் தெற்கு தெரு, வள்ளியூர் - 627117, திருநெல்வேலி.

துணைத் தலைவர் - ஜெனிபர் தினகர் 83, மாணிக்க வாத்தியார் தெரு, செல்வமருதூர், திசையன்விளை - 627657, திருநெல்வேலி.

அமைப்பாளர் - அன்றனிஅல்வின் பிரேமா 8/3-1, வடக்குத் தெரு, கரைச்சுத்துபுதூர், திசையன்விளை வட்டம் - 627657. திருநெல்வேலி.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். ராஜேஸ்வரி 2/455, காமராஜர் தெரு, அய்யா நகர், ஆ.திருமாள்புரம், திருநெல்வேலி. 2) ரா. ரெஜினா 33, சுனாமி குடியிருப்பு, இடிந்தகரை, விஜயாபதி ஊராட்சி - 627104 திருநெல்வேலி. 3) வீ. வள்ளி 2பி, தேவர் பெரிய தெரு, வள்ளியூர் - 627117, திருநெல்வேலி. 4) ரா. ஆனந்தி வடக்கு ரத வீதி, பணகுடி, திருநெல்வேலி. 5) ரா. வசுமதி மெயின் ரோடு மேற்கு பகுதி, ஸ்ரீரெகுநாதபுரம் - 627109, திருநெல்வேலி.

வலைதள பொறுப்பாளர்கள் - 1) கௌரி சிதம்பராபுரம் அஞ்சல், நாங்குநேரி தாலுக்கா, களக்காடு - 627501, திருநெல்வேலி. 2) ஆர். கல்யாணி வெங்கட்ராயபுரம் ஊராட்சி, நாங்குநேரி தாலுக்கா - 627118, திருநெல்வேலி.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 12-03-2026.

**நாமக்கல் ப.இராணி**
செயலாளர்
தி.மு.க. மகளிர் தொண்டர் அணி